**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8075898

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : ஈரோடு  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு ஈரோடு  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 01/AC/2022  Date: நாள் 09.09.2022

2. (i) Act சட்டம்: The P.C Act 1988 as  Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 7(a)
   (ii) Act சட்டம்: Amended by the P.C  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amended) Act 2018.  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 2022ம் வருடம்  Date to : நாள் வரை 05.09.22 வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் ஜீன் கடைசி வாரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.09.2022  Time : நேரம் 17.10 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D Vol-III  Time : நேரம் 08.09.22 / 17. மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 60கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், எண்ணமங்கலம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. செல்வராஜ்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நாராயண கவுண்டர் (Late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1955  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி 198/1, கோட்டாண்டேடு தோட்டம், ஊராளி நாட்டூர், எண்ணமங்கலம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) சதீஸ்குமார், கிராம நிர்வாக அலுவலர், எண்ணமங்கலம் கிராமம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.
   2. திரு. பாலு, கோவிலார், எண்ணமங்கலம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் (தனி நபர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுவது:
தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09.9.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு செல்வராஜ்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.09.2022
07.15 hrs

Name: பெயர் M. ரேகா,
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.நு.க.பிரிவு
ஈ.ரோடு.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 1/AC/2022 u/s 7(a), 12 r/w 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 08.09.2022 தேதி மாலை 17.10 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது N.செல்வராஜ், த/பெ.நாராயண கவுண்டர்(லேட்), 198/1, கோட்டான்குழி தோட்டம், விரலி காட்டூர், எண்ணமங்கலம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் N.செல்வராஜ், த/பெ.நாராயண கவுண்டர்(லேட்), 198/1, கோட்டான்குழி தோட்டம், விரலி காட்டூர், எண்ணமங்கலம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம். பெறுதல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், எண்ணமங்கலம் கிராமம், விரலி காட்டூர், கோட்டான்குழி தோட்டம், கதவு எண்.198/1-ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது தந்தை திரு.நாராயணகவுண்டர் அவர்களுக்கு பூர்வீகமாக எண்ணமங்கலம் கிராமம் சர்வே எண்.549/1-ல் சுமார் 3 ஏக்கர் 80 செண்ட் பூமி இருந்தது. எனது தந்தைக்கு நானும், எனது தம்பி திரு.குருமூர்த்தி மற்றும் எனது அக்கா திருமதி.சம்பூர்ணம் ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவோம். எனது தந்தை கடந்த டிசம்பர் 2006-ம் ஆண்டு காலமாகிவிட்டார். பின்னர், கடந்த 2022 மே மாதத்தில் நானும், எனது தம்பி குருமூர்த்தியும் மேற்படி நிலத்தை பாகப்பிரிவினை செய்து பத்திரமாக பதிவு செய்யலாம் என்று முடிவு செய்தோம். அதன்படி, கடந்த 2022 ஜூன் இரண்டாவது வாரத்தில் அந்தியூரில் ஆபிஸ் வைத்து நடத்தி வரும் வக்கீல் திரு.பாலமுருகன் அவர்களை நானும், எனது தம்பி குருமூர்த்தி அவர்களும் சென்று பார்த்து, பாகப்பிரிவினை செய்வது சம்மந்தமாக சொன்னோம். அப்போது அவர் கேட்ட எனது தந்தை பெயரில் எண்ணமங்கலம் கிராமம் சர்வே எண்.549/1-ல் சுமார் 3 ஏக்கர் 80 செண்ட் பூமியின் பத்திரம், எனது தந்தையின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல்கள், வில்லங்க சான்று நகல் மற்றும் சில கிராம ஆவணங்களை கொடுத்தோம். பின்னர், 20.06.2022-ம் தேதி எனது அக்கா திருமதி.சம்பூர்னம் அவர்களுக்கு குடும்ப பொது நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் வழங்கினோம். பின்னர், எனது பெயரிலும், எனது தம்பி குருமூர்த்தி பெயரிலும் தனித்தனியாக ஆளுக்கு சுமார் ஒன்னே முக்கால் ஏக்கர் வீதம் பாத்தியப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் அந்தியூர் சார்பதிவக ஆவண எண்.2818/2022 ஆக பதிவானது. பின்னர், அந்த பத்திரத்தை ஒரு வாரம் கழித்து நானும், எனது தம்பி குருமூர்த்தியும் வக்கீல் ஆபிசிற்கு சென்று வாங்கிகொண்டோம். பின்னர், எனது தம்பி திரு.குருமூர்த்தி கிளம்பி சென்றுவிட்டார். அன்றையதினம், எண்ணமங்கலம், கோவிலூரரை சேர்ந்த எண்ணமங்கலம் மணியகாரர் ஆபிசில் மணியகாரருக்கு

உதவியாக இருந்து வரும் திரு.பாலு என்பவர் என்னை அந்தியூரில் பார்த்து பாகப்பிரிவினை பத்திரம் பண்ணியாச்சு போல என்று கேட்டார். நானும் ஆமாம் என்றேன். உடனே பட்டா மாறுதலும் பண்ணி கொள்ளுங்கள் அப்போது தான் ஏதாவது லோன் வாங்கமுடியும் என்று சொன்னார். மேலும், மேற்படி இடத்திற்கு பட்டா மாறுதல் செய்ய எனது பாகப்பிரிவினை பத்திரம், அதன் மூலப்பத்திரம் ஆகிவற்றின் நகலினை கேட்டு பெற்றுக்கொண்டார். அப்போது திரு.பாலு என்னிடம் பட்டா மாறுதல் செய்ய உங்களுக்கும், உங்களது தம்பிக்கும் சேர்த்து 8 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தால் உடனடியாக பட்டா மாறுதல் செய்து விடலாம் என்று சொன்னார். அதற்கு நான் மட்டும் தனியாக பட்டா மாறுதல் செய்து கொள்கிறேன் என்று சொன்னேன். அப்படியென்றால் அதற்கு 4 ஆயிரம் செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் தொகை அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு பாலு வேண்டுமானால் எண்ணமங்கலம் கிராமம் மணியகாரர் திரு.சதீஸ்குமாருக்கு போன் போட்டு தருகிறேன் பேசுங்கள் என்று சொல்லி, போன்போட்டு மணியகாரர் திரு.சதீஸ்குமாரிடம் பேசச்சொன்னார். நானும் போனில் பேசினேன் அப்போது மணியகாரர் திரு.சதீஸ்குமார் என்னிடம் உங்க இரண்டு பேருக்கும் பட்டா மாறுதல் பண்ணுவது என்றால் 8 ஆயிரம் ரூபாய் செலவாகும், தனித்தனியாக என்றால் ஆளுக்கு 4 ஆயிரம் செலவாகும் என்றும், அந்த தொகையை திரு.பாலுவிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பின்னர், நான் பாலுவிடம் பணத்தை கொஞ்சம் குறைத்து வாங்கி கொண்டு மணியகாரரிடம் பட்டா மாறுதல் செய்து கொடுக்க சொன்னேன். சரி பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு திரு.பாலு சென்றுவிட்டார். பின்னர், 2022 ஜூலை முதல் வாரத்தில் எண்ணமங்கலம் மணியகாரர் ஆபிசிற்கு சென்று மணியகாரர் திரு.சதீஸ்குமார் அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் பற்றி கேட்டபோது, மறுபடியும் மறுபடியும் சொல்ல முடியாது இருவருக்கும் சேர்த்து என்றால் 8 ஆயிரம், தனியாக என்றால் ஆளுக்கு 4 ஆயிரம் ரூபாய் பட்டா மாறுதலுக்காக கொடுக்க வேண்டும் என்று கறாராக சொன்னார். நான் கிளம்பி வீட்டிற்கு சென்றுவிட்டேன். சரி பின்னர் பார்த்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். பின்னர், எனக்கு தெரிந்த நபர்களிடம் பட்டா மாறுதல் செய்வது பற்றி கேட்டபோது, அவர்கள் இ சேவை மையத்தில் பதிவு செய்ய சொன்னார்கள். எனவே, நான் 2.9.2022-ம் தேதி பவானி தாலுக்கா அலுவலக வளாகத்தில் உள்ள இ சேவை மையம் சென்று ஆன்லைனில் பட்டா மாறுதல் செய்ய பதிவு செய்தேன். அதன்பின்பு, 5.9.2022-ம் தேதி மீண்டும் எண்ணமங்கலம் மணியகாரர் ஆபிசிற்கு சென்று மணியகாரர் திரு.சதீஸ்குமார் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னை பார்த்து கையில் என்ன பத்திரமா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் என்று சொன்னேன். அதற்கு மணியகாரர் திரு.சதீஸ்குமார் அவர்கள் என்னிடம் நீங்கள் ஏற்கனவே கொடுத்த பத்திரம் தான் பாலுகிட்ட இருக்குதே என்று சொன்னார். பின்னர், என்னிடமிருந்து ஒப்புகை சீட்டை வாங்கி பார்த்துவிட்டு, எங்க போட்டது என்று கேட்டார். நான் அதற்கு தாலுக்கா அலுவலகத்தில் என்று சொன்னேன். பின்னர், நான் அவரிடம் அவர் ஏற்கனவே கேட்ட

தொகையை கொஞ்சம் குறைக்க சொன்னேன். அதற்கு அவர் நான் தான் ஏற்கனவே சொல்லியாக்சுல என்று சொல்லிவிட்டு, அருகில் அமர்ந்திருந்த பாலுவை காட்டி பாருங்க என்று சைகை செய்தார். அதனால், நான் பாலுவை பார்த்தேன். அப்போது பாலு 4 ஆயிரம் ரூபாய் கொடுங்க இப்ப இருந்தா கொடுத்திட்டு போங்க என்று சொன்னார். அந்த சமயம் என்னிடம் பணம் இல்லாததால் இரண்டொரு நாளில் வருவதாக சொன்னேன். அதற்கு பாலு யோசித்துவிட்டு, வருகின்ற வெள்ளிக்கிழமை வந்து 4 ஆயிரம் கொடுத்துடுங்க என்று சொன்னார். அப்பொழுது நான் மணியகாரர் திரு.சதீஸ்குமார் அவர்களை பார்க்க அவரும் ஆமோதித்து தலையாட்டினார். பின்னர், மணியகாரர் திரு.சதீஸ்குமாரிடம் சரிங்க வெள்ளிக்கிழமை வருகிறேன் என்று சொன்னேன். சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர், யோசித்து பார்த்தேன். எனது பேரில் பட்டா மாறுதல் உத்தரவு பெற எண்ணமங்கலம் மணியகாரர் திரு.சதீஸ்குமார் அவர்கள் நேரடியாகவும், பாலு என்பவர் மூலமும் லஞ்சமாக கேட்கும் 4 ஆயிரத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, பட்டா மாறுதல் உத்தரவை பெற்றுத்தர லஞ்சமாக 4 ஆயிரம் பணம் கேட்கும் எண்ணமங்கலம், மணியகாரர் திரு.சதீஸ்குமார் மற்றும் பாலு ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மேற்படி லஞ்ச பணம் 4 ஆயிரத்தை கொண்டு வந்துள்ளேன் என்பதையும் இதன்மூலம் தெரிவிக்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (செல்வராஜ்) 08.9.22.

Sir, Received the above said computer typed complaint on 08.09.2022 at 17.10 hrs. Sd/- (xxxxxxxx) 08.09.2022 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2022 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 for the accused A-1 and 12 r/w 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 for the accused A-2 at 07.00 hrs today on 09.09.2022. Sd/- (xxxxxxxx) 09.09.2022 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.N.Selvaraj, S/o Narayana Gounder(Late), 198/1, Kottankuli Thottam, Viralikattur, Ennamangalam, Anthiyur (Taluk), Erode (District) is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

09.09.22

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.